## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (07.03.2015 முதல் 11.03.2015)

*அறிக்கை எண் 18/2015* *தேதி: 06.03.2015*

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 09°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (07.03.2015 முதல் 11.03.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 74 முதல் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 43 முதல் 48 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ முதல் 14 கி.மீ அளவுக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும் .

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07.03.15 | 10 | 35 | 23 | 7 | 78 | 48 | 13 | வட கிழக்கு |
| 08.03.15 | 8 | 34 | 23 | 6 | 76 | 48 | 14 | வட கிழக்கு |
| 09.03.15 | 3 | 35 | 23 | 6 | 76 | 45 | 13 | வட கிழக்கு |
| 10.03.15 | 3 | 35 | 23 | 5 | 75 | 44 | 12 | வட கிழக்கு |
| 11.03.15 | 1 | 35 | 23 | 4 | 74 | 43 | 14 | வட கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் சுழல் காற்று வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் குலை தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுப்பது அவசியமாகும்.
- ✓ கோடையில் காணப்படும் மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்வதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சி, நோய் தாக்குதலையும் கட்டுப்படுத்தலாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தள்ளி வைக்கவும் அல்லது மண்ணின் ஈரப்பதத்திற்கேற்ப நீர் பாய்ச்சவும்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் இடி, மின்னலும் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்களது கால்நடைகள் மற்றும் பறவைகளை பாதுகாத்துக் கொள்ளவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் இடி, மின்னலும் வரலாம் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்களது கால்நடைகள் மற்றும் பறவைகளை பாதுகாத்துக் கொள்ளவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**